தொலைபேசி: (+94) (0)77 772 9020

மின்னஞ்சல்: mkshivaji@yahoo.com


**வடக்கு மாகாண சபையின் 2014.05.22ம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் மாகாண சபையின் உறுப்பினர் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்களால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

**பிரேரணை**

**வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்ற தமிழ் பேசும் வைத்தியர்களையும் ஆங்கில, தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களையும் அனுப்பி உதவுமாறு இந்தியாவுக்குக் கோரிக்கை:**

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறையை நீக்க இந்தியா தமிழ்ப் பேசும் வைத்தியர்களை இரண்டு ஆண்டுகள் சேவை செய்ய அனுப்பி வைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றோம்.

2. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் ஆங்கில, தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்கள் பற்றாக்குறையை நீக்க இந்தியா தமிழ் பேசும் ஆங்கில, தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களை இரண்டு ஆண்டுகள் சேவை செய்ய அனுப்பி வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றோம்.

3. வைத்தியர்களையும், ஆங்கில, தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையாற்ற உரிய நடவடிக்கைகளையும் அனுமதிகளையும் வழங்கி உதவ ஏற்பாடுகள் செய்யுமாறு இந்திய அரசையும், தமிழக அரசையும், இலங்கை அரசையும் வடக்கு மாகாண அரசின் இச் சபை கேட்டுக் கொள்கின்றது.

(எம்.கே.சிவாஜிலிங்கம்)

மாகாண சபை உறுப்பினர்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

எம். கே. சிவாஜிலிங்கம்

வடக்கு மாகாண சபை உறுப்பினர்

யாழ்ப்பாண மாவட்டம்